E.P.No.2/2019
Date30.05.2019
Witness: WW 1 Thiru.A.Abdul Mazeeth

சாட்சிக்கு பிரமாணம் செய்விக்கப்பட்டு சாட்சியிடம் 1 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை -

2008 ம் ஆண்டு முதல் 1 ம் எதிர்மனுதாரர் நிர்வாகம் தொழிலாளிகளுக்கு ஊதியம் மற்றும் இதர பணப்பலன்கள் வழங்க முடியாமல் நஷ்டத்தில் இயங்கிவருகிறது என்றால் 2005 ம் ஆண்டு முதலே 1 ம் எதிர்மனுதாரர் எஸ்டேட் நஷ்டத்தில்தான் உள்ளது. 1 ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான தேயிலை தொழிற்சாலை தற்போது இயங்கவில்லை என்றால் சரிதான். மேற்படி தொழிற்தகராறு வழக்கில் முதலில் 1 ம் எதிர்மனுதாரரைத்தான் நான் தரப்பினராக சேர்த்திருந்தேன் என்றும் பிறகு 2 ம் எதிர்மனுதாரரையும் வழக்கில் தரப்பினராக சேர்த்தேன் என்றும் சொன்னால் சரிதான். இரண்டாம் எதிர்மனுதாரரை மேற்படி வழக்கில் தரப்பினராக சேர்ப்பதற்கும் வழக்கை திருத்தம் செய்வதற்கும் மனுக்களுடன் நான் தாக்கல் செய்த பிரமாண பத்திரங்கள் நகல் (2) தற்போது என்னிடம் காட்டப்படுபவை என்றால் சரிதான். அவை Ex.M1 வரிசையாக குறியீடு செய்யப்படுகிறது. 1 ம் எதிர்மனுதாரருக்கும், 2 ம் எதிர்மனுதாரருக்கும் இடையில் 2009 ம் ஆண்டு ஏற்பட்ட குத்தகை ஒப்பந்தம் அடிப்படையில் 1 ம் எதிர்மனுதாரர் எஸ்டேட் 2009 ம் ஆண்டு முதல் 2 ம் எதிர்மனுதாரரின் கட்டுப்பாட்டில் இருந்து வருகிறது என்றால் சரிதான். என்னை வேலை நீக்கம் செய்வதற்கு முன்பு நான் இரண்டாம் எதிர்மனுதாரர் கட்டுப்பாட்டில் 1 ம் எதிர்மனுதாரர் எஸ்டேட்டில் வேலை செய்து 2 ம் எதிர்மனுதாரரிடம் ஊதியம் வாங்கியிருக்கிறேன் என்றால் சரிதான். 2 ம் எதிர்மனுதாரருக்கும் எனக்கும் ஏற்பட்ட பிரச்சனை காரணமாகத்தான்

2 ம் எதிர்மனுதாரர் என்னை வேலை நீக்கம் செய்தார் என்றால் சரியல்ல. 1 ம் எதிர்மனுதாரர்தான் வேலை நீக்க உத்தரவில் கையொப்பம் செய்துள்ளார். தற்போதும் 2 ம் எதிர்மனுதாரர் நிர்வாகம்தான் தொடர்ந்து 1 ம் எதிர்மனுதாரர் எஸ்டேட்டை நிர்வாகம் செய்துவருகிறது என்றால் சரிதான். 2009 ம் ஆண்டு முதல் தொழிலாளர்களுக்கு ஊதியம் மற்றும் இதர சலுகைகளை 2 ம் எதிர்மனுதாரர் நிர்வாகம்தான் வழங்கிவருகிறது என்றால் சரிதான். தொழிலாளர்களை மேற்பார்வை செய்து அவர்கள் பணிகளை ஒதுக்கி வருவது 2 ம் எதிர்மனுதாரர் நிர்வாகம்தான் என்றால் சரிதான். 2009 ம் ஆண்டு வரை தொழிலாளர்களுக்கு செலுத்தவேண்டிய பணிக்கொடையை 1 ம் எதிர்மனுதாரர் நிர்வாகமும் 2009 ம் ஆண்டிற்கு பிறகு தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டிய பணிக்கொடையை 2 ம் எதிர்மனுதாரர் நிர்வாகமும் வழங்கிவருகிறது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் நிறைவேற்று மனுவில் இரண்டு எதிர்மனுதாரர்கள்மீதும் சேர்த்து பரிகாரம் கேட்க முடியாது என்றால் சரியல்ல. நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவில் எந்த எதிர்மனுதாரர் உத்தரவை நிறைவேற்ற வேண்டும் என்று குறிப்பாக குறிப்பிடவில்லை என்றும் அதனால் அந்த உத்தரவை நிறைவேற்ற முடியாது என்றும் சொன்னால் சரியல்ல. நீதிமன்றம் உத்தரவை இரண்டு எதிர்மனுதாரர்களும் நிறைவேற்ற வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளது. 1 ம் எதிர்மனுதாரரிடம் நிர்வாகமோ , வியாபாரமோ இல்லாததால் 1 ம் எதிர்மனுதாரர் உத்தரவை நிறைவேற்ற வேண்டும் என்று நான் பரிகாரம் கேட்க முடியாது என்றால் சரியல்ல. தொழிலாளர் நீதிமன்ற உத்தரவின் மீது 1 ம் எதிர்மனுதாரர் மேல்முறையீடு செய்தது எனக்கு தெரியும் என்றால் சரிதான். மேல்முறையீடு WP.No.9968/2019 என்ற எண்ணில் தற்போது நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். மேல்முறையீடு முடியும் வரை நான் இந்த நிறைவேற்று மனுவில் 1 ம் எதிர்மனுதாரருக்கு

எதிராக பரிகாரம் கேட்க முடியாது என்றால் தவறு. நிறைவேற்று மனுவில் 2ம் எதிர்மனுதாரர் மீது மட்டும்தான் நான் பரிகாரம் கேட்க முடியும் என்றால் இல்லை, இரண்டு எதிர்மனுதாரர்களும் எனக்கு பரிகாரம் வழங்கவேண்டும். 1ம் எதிர்மனுதாரர் எஸ்டேட் நிர்வாகம் அவர் கட்டுப்பாட்டில் இல்லாததால் 1ம் எதிர்மனுதாரர் எனக்கு எந்த பரிகாரமும் வழங்க இயலாது என்றால் வேலை நீக்க உத்தரவு 1ம் எதிர்மனுதாரர் கையொப்பம் செய்துள்ளதால் அவரும் எனக்கு பரிகாரம் வழங்க கடமைப்பட்டுள்ளார்.

<u>இரண்டாம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை -</u>

நான் ஆரம்பத்தில் 1ம் எதிர்மனுதாரர் நிர்வாகத்தில்தான் பணியில் சேர்ந்தேன் என்றால் ஆமாம். 1ம் எதிர்மனுதாரர் நிர்வாகம்தான் எனக்கு பணி நியமன உத்தரவு வழங்கியது என்றால் ஆமாம். 1ம் எதிர்மனுதாரர் நிர்வாகம்தான் எனக்கு வேலை நீக்க உத்தரவு வழங்கியது என்றால் ஆமாம். அதற்கு முன்பு எனக்கு அறிவிப்பு அனுப்பினார்களா என்றால் இல்லை. வேலை நீக்க உத்தரவு எந்த முறையில் எனக்கு வழங்கப்பட்டது என்றால் என் வீட்டுக்கதவில் ஒட்டி வழங்கப்பட்டது. நான் சட்டவிரோதமான நடவடிக்கையில் ஈடுபட்டதால் வேலை நீக்கம் செய்யப்படுவதாக அந்த உத்தரவில் கூறப்பட்டிருந்தது என்றால் அப்படித்தான் கூறியிருந்தார்கள். நான் வேலை நீக்கத்தை எதிர்த்து தொழிலாளர் அலுவலகத்தில் தாக்கல் செய்த மனுவில் இரண்டாம் எதிர்மனுதாரர் தரப்பினர் இல்லை என்றால் சரிதான். மேற்படி I.D.No.26/2011 நிலுவையில் இருந்தபோது 1ம் எதிர்மனுதாரர் 22.09.2012 தேதியிட்ட கடிதத்தை எனக்கு அனுப்பி எனக்கு சேரவேண்டிய பணிக்கொடை தொகையினை அலுவலகத்தில் வந்து பெற்றுக்கொள்ளும்படி கூறியிருந்தார் என்றும் அந்த கடிதத்துடன் 20.04.2011 தேதியிட்ட Demand Draft xerox copy யினை இணைத்து

அனுப்பியிருந்தார் என்றும் சொன்னால் சரிதான். நான் பணிக்கொடை தொகையினை பெற்றுக்கொள்ளவில்லை என்றால் சரிதான். மேற்படி கடிதத்திற்கு நான் மறுப்புக்கடிதம் 1 ம் எதிர்மனுதாரருக்கு அனுப்பவில்லை என்றால் சரியல்ல. மறுப்பு கடிதம் அனுப்பினேன் அந்த மறுப்பு கடிதத்தை மேற்படி தொழிற்தாவாவில் என்தரப்பு 23 வது ஆவணமாக தாக்கல் செய்துள்ளேன். எனக்கு பணிக்கொடை தொகையினை 1 ம் எதிர்மனுதாரர் வழங்கியதாலும் எனக்கு சேரவேண்டிய மற்ற அனைத்து பணப்பலன்களையும் 1 ம் எதிர்மனுதாரர்தான் எனக்கு வழங்கவேண்டும் என்றும் 2 ம் எதிர்மனுதாரர் மீது எந்த பரிகாரமும் கேட்பதற்கு எனக்கு உரிமையில்லை என்றும் சொன்னால் சரியல்ல. 1 ம் எதிர்மனுதாரர் அனுமதியுடன் 2 ம் எதிர்மனுதாரர் எனக்கு வேலை வழங்க தற்போதும் தயாராக உள்ளார் என்றும் அதனால் நான் இரண்டாம் எதிர்மனுதாரர் மீது எந்த பரிகாரமும் கேட்க முடியாது என்றும் சொன்னால் சரியல்ல. இரண்டாம் எதிர்மனுதாரர் என்னை வேலை நீக்கம் செய்யவில்லை என்றும் இரண்டாம் எதிர்மனுதாரர் பணி வழங்க மறுக்கவில்லை என்றும் ஆகவே, நான் இந்த நிறைவேற்றுமனுவில் இரண்டாம் எதிர்மனுதாரர் மீது கேட்டுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றும் சொன்னால் சரியல்ல. நான் இரண்டாம் எதிர்மனுதாரரிடம் வேலையில் இருந்தவரை எனக்கு சேரவேண்டிய சம்பளம் நிலுவையில்லாமல் பெற்றுக்கொண்டேன் என்றால் ஆமாம். 1 ம் எதிர்மனுதாரர் வேலை நீக்க உத்தரவு வழங்கியதால்தான் நான் இரண்டாம் எதிர்மனுதாரரிடம் வேலைக்கு போகவில்லை என்றால் ஆமாம். இரண்டாம் எதிர்மனுதாரர் என்னை வேலைக்கு வரவேண்டாம் என்று எழுத்துபூர்வமாக எனக்கு உத்தரவு வழங்கவில்லை என்றால் சரிதான். ஆகவே, இரண்டாம் எதிர்மனுதாரர் மீது நான் கேட்டுள்ள பரிகாரம் நிலைக்கத்தக்கதல்ல

என்றும் இரண்டாம் எதிர்மனுதாரர் பொருத்து இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை - இல்லை.